# The Rights of Using Private Defense under Islamic Law & Sri Lankan Criminal Law- a Comparative Analysis

M.M. Shiyana
Assistant Lecturer, Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
shiyana@seu.ac.lk

**ஆய்வு சுருக்கம்**

தற்பாதுகாப்பு உரிமையானது எந்தவொரு சட்டவிரோத தாக்குதலையும் எதிர்ப்பதற்கு ஒருவரை சட்டபூர்வமாக அனுமதிக்கிறது. பண்புரீதியான இவ்வாய்வானது இலங்கை குற்றவியல் சட்டத்தில் குறியிடப்பட்டுள்ள தற்பாதுகாப்பு உரிமைகள் குறித்தும் இஸ்லாமிய நீதித்துறையின் அடிப்படையில் தற்பாதுகாப்புரிமைகள் குறித்தும் ஒப்பீட்டு ஆராய விளைகிறது. முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளை மையப்படுத்திய இவ்வாய்வானது விபரிப்பு, ஒப்பீட்டு ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்பாதுகாப்பு என்ற கோட்பாட்டின் கீழ் ஒரு ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான வன்முறைச் செயலை நியாயப்படுத்த ஒரு பிரதிவாதிக்கு இலங்கையின் தண்டனைச் சட்டம் உரிமையை வழங்குவதைப் போலவே இஸ்லாமிய சட்டமும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இவ்வுரிமையை வழங்கியிருக்கின்றது. இவ்விருசட்டங்களிலும் உள்ள பெரும்பாலான தற்பாதுகாப்பு விதிகள் ஒத்ததன்மையில் காணப்படுவதோடு இஸ்லாமிய தெய்வீக ஆணை வழியே தற்காப்பு விதிகளை பேணுவதில் இலங்கை குற்றவியல் சட்டங்கள் வேறுபட்டமைகின்றன. தனிநபர் பாதுகாப்புரிமை தொடக்கம் சமூகத்தின் கூட்டு தார்மீகத்தரங்களையும் மதிப்புகளையும் பாதுகாப்பதை இஸ்லாமிய நீதித்துறை வலியுறுத்துவதை தரவுப்பகுப்பாய்வு எடுத்துக்காட்டுகிறது. இப்பாதுகாப்புரிமையானது குறித்த சூழ்நிலைகள், குற்றம் மற்றும் குற்ற நடவடிக்கையின் நியாயத்தன்மை ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடலாம். பாதுகாவலர், எதிராளியின் தாக்குதலை சான்றுகள் மூலம் நிரூபிக்க வேண்டிய கடப்பாட்டிலுள்ளார். வரம்பு மீறுதல், கடத்தல், சேதம் விளைவித்தல், சொத்துக்களை அழித்தல், கொள்ளை மற்றும் திருட்டு ஆகியன சொத்துக்கள் மீதான குற்றங்களாகவும் உடலுக்கு தீங்கு விளைவித்தல், கற்பழிப்பு, இயற்கைக்கு மாற்றமான காம வெளிப்படுத்தல், ஆட்கடத்தல், சட்ட விரோத தடுப்பு, வன்குறும்பு, கொலை ஆகியன உடல் சார்ந்த குற்றங்களாகவும் கருதப்படுகின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முன் ஷரீஆ அறிவித்ததைவிட தற்போதைய இலங்கை குற்றவியல் சட்டத்தில் தற்பாதுகாப்புரிமை தொடர்பில் முன்மொழியப்பட்ட புதிய மாற்றங்கள் இல்லை என்பதையும் இவ்வாய்வு முடிவுகள் பிரஸ்தாபிக்கின்றன. குற்றவியல் சட்ட பயிற்சியாளர்களுக்கும் இஸ்லாமிய சட்டத்துறை பயிலும் மாணவர்களும் சட்டத்துறைசார் ஆய்வாளர்களுக்கும் இவ்வாய்வானது பயனுடையதாக அமைவதோடு மக்களிடையே தற்பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினையும் ஏற்படுத்தவல்லது.

**பிரதான சொற்கள்** -தற்பாதுகாப்பு, இஸ்லாமிய நீதித்துறை, இலங்கை குற்றவியல் சட்டம்

## 1. அறிமுகம்

தற்பாதுகாப்பு என்ற சொல் பாதுகாக்கும் செயல் எனப்பொருள் கொள்ளப்படும். தற்பாதுகாப்பின் கருத்தானது உண்மையாக நிகழும் அச்சுறுத்தலுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சில பாதுகாப்பு நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு சட்டபூர்வமான உரிமையைக் குறிக்கிறது. இது ஒருவரின் வாழ்க்கை, சுகாதாரம், சொத்து, கௌரவம் போன்ற பிற உரிமைகளை பாதுகாப்பதற்கான தார்மீக மற்றும் சட்டப்பகுத்தறிவிலிருந்து பிறக்கிறது. இஸ்லாமிய சட்டத்துறைசார் அறிஞர்களின் பார்வையில் தற்பாதுகாப்பு என்பது ஒருவரின் கடமையாகக் கருதப்படுவதோடு இது குற்றவாளிக்கு எதிரான எந்தவொரு பாதுகாப்புச் செயலின் பின்விளைவுகளை பொருட்படுத்தாது பாதுகாப்பாளரின் சக்தியை பயன்படுத்துவதை நியாயப்படுத்துகிறது (Sulaiman, 2016). இஸ்லாமிய சட்டத்தின் முதன்மை ஆதாரங்களான அல்குர்ஆன், ஹதீஸ் என்பனவும் துணைச்சட்ட ஆதாரங்களான இஜ்மா, கியாஸ், ஆதா என்பவற்றோடு உசூலுல் பிக்ஹ் அடிப்படையில் பெறப்பட்ட ஆதாரங்களும் துணைச் சட்டங்களும் இஸ்லாமிய நீதித்துறையை தழுவி நிற்கின்றன. இஸ்லாமிய நீதித்துறையானது மரபுகள் மற்றும் ஷரீஆ சட்டம் ஆகியவற்றைக் கொண்டுள்ளதால் சட்ட விதிகளை வடிவமைப்பதில் சமமான பாத்திரத்தை வகிக்கிறது. இது வெவ்வேறு நாடுகளிலும் வெவ்வேறு வரலாற்று சூழ்நிலைகளிலும் காலமாற்றங்களுக்கு ஏற்றார் போல உருமாறும் தன்மை கொண்டதால் இஸ்லாமிய நீதித்துறையின் கீழ் தற்பாதுகாப்புக்கான சட்டபூர்வமான அடிப்படைகள் பரிணாமத்துக்கும் மாற்றத்துக்கும் உட்பட்டதாக அமைகிறது. எனவே தற்காப்புக்கான சட்டவிதிகளை வெறும் கோட்பாடுகளை மாத்திரம் கொண்டு அவதானிக்கக் கூடாது. மாறாக நடைமுறை சவால்கள், பிரச்சினையின் தன்மை ஆகியவற்றின் பின்னணியில் அவதானிக்க வேண்டும் (Sulaiman,2016). ஒருவரின் வாழ்க்கை, சொத்து மற்றும் கற்புக்கான உரிமை மீறல் சட்டவிரோதமானது என்பதை இஸ்லாம் வெளிப்படையாக அறிவிக்கிறது (Ahamed,1976).

சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் சட்டவிரோத ஆக்கிரமிப்புகளுக்கெதிராக தம் உரிமைகளைப் பாதுகாக்க அனுமதிக்கப்படுகிறார். ஆனால் அவரது சொந்த காரணத்திற்காக அவர் நீதிபதியாக இருக்க முடியாது (Abdul Tawwab, 1983). எனினும் ஒருவர் தனது உடல், உயிர், மானம், சொத்துக்கள் என்பவற்றுக்கு பிறரால் தீங்கு எழக்கூடும் எனக்கருதும் சாத்தியமான நிலைமைகளின் போது எந்தவொரு குற்றவியல் நோக்கமும் இல்லாமல் தற்பாதுகாப்புக் கருதி மேற்கொள்ளப்படும் செயல்கள் எதுவுமே சட்டத்தின் முன் குற்றமாகக் கருதப்படாது. ஏனெனில் பிறரின் தீங்கிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே இதனை செய்கிறோம். இஸ்லாமிய சட்டத்தில் தற்பாதுகாப்பு உரிமை தொடர்பில் முஸ்லிம்கள் மத்தியிலும் முஸ்லிமல்லாதவர்கள் மத்தியிலும் பல தவறான எண்ணக்கருக்கள் காணப்படுகின்றன. இஸ்லாத்தில் தற்பாதுகாப்பு உரிமையை பயன்படுத்துதல் அடிப்படைவாதம், அநீதி என்றும் இஸ்லாம் வன்முறையை போதிக்கிறது என்றும் தவறாக விமர்சிக்கப்படுகின்றன. குற்றவியல் சட்டமென்பது குற்றவாளிகளின் தண்டணையுடன் தொடர்புயை சட்டவிதிமுறைகளைக் குறிக்கிறது (Oxford Dictionary,2021). இது குற்றங்களை வரையறுக்கும் செயல்கள், சந்தேகத்திற்கிடமான நபர்களின் செயற்பாடுகள், தண்டப்பணம்,

விசாரணையை ஒழுங்குபடுத்தல், குற்றங்களின் வகைகள், குற்றமிழைத்தவர்களுக்கான சிகிச்சை ஆகியவற்றைக் கொண்ட சட்டங்களாகும் (Britanica,2021).

இலங்கை குற்றவியல் சட்டமானது குற்றங்கள் தொடர்பிலும் அதன் நியமங்கள் தொடர்பிலும் விளக்கமளிக்கின்றது (தண்டணைச் சட்டக் கோவை 1883ஆம் ஆண்டின் இலக்கம் 02). பொதுவாக தற்பாதுகாப்பு உரிமை தொடர்பில் மக்களிடையே விழிப்புணர்வின்மை காணப்படுவதை அறிய முடிவதோடு அதனை பிழையாக பிரயோகிக்கும் நிலையும் காணப்படுகிறது. எனவே இஸ்லாமிய நீதித்துறையின் அடிப்படையில் தற்பாதுகாப்பு தொடர்பான நியமங்கள் இலங்கை குற்றவியல் சட்ட நியமங்களை ஒத்ததாக அமைகின்றதா? அல்லது வேறுபடுகின்றனவா? என்பதனை இனங்காண்பதை பின்னணியாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் இதுவரை ஆராயப்படவில்லை என்பதும் ஆய்வு இடைவெளியை சுட்டிக்காட்டுகிறது.

### 1.1. ஆய்வு நோக்கம்

இஸ்லாமிய நீதித்துறை மற்றும் இலங்கை குற்றவியல் சட்டத்தின் கீழ் தற்பாதுகாப்பு உரிமை தொடர்பான சட்ட விதிகளை ஒப்பு நோக்கி ஆராய்தல்.

## 2. ஆய்வு முறை

பண்புசார் முறையில் அமையப்பெற்றுள்ள இவ்வாய்வானது முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். இதற்கேற்ப அல்குர்ஆன், அல்ஹதீஸ், சட்ட ஆவணங்கள், நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணைய ஆக்கங்கள், என்பன மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் விபரிப்பு மற்றும் ஒப்பீட்டு ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி தரவுப்பகுப்பாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 3. பெறுபேறுகள் மற்றும் முடிவுகள்

### 3.1. தற்பாதுகாப்புரிமை

தீமை விளைக்க வேண்டுமென்ற குற்றமனமின்றி ஆளுக்கு அல்லது ஆதனத்திற்கு நேரவிருக்கும் தீங்கினைத் தடை செய்யும் அல்லது அதனை விலக்கும் நல்நோக்கத்துக்காக ஏதாவது முயற்சி செய்யப்பட்டிருப்பின், அது தீமையை ஏற்படுத்தும் சாத்தியமுள்ளது என்ற அறிவுடன் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் அது தவறாகாது (இலங்கை தண்டணைச் சட்டக் கோவை 90). எனவே இச்சட்டவிதிக்கமைவாகவே இஸ்லாமிய ஷரீஆவில் தனியார் பாதுகாப்புக்கான உரிமை தொடர்பான ஏற்பாடுகள் புனித குர்ஆனிலும் ஹதீஸிலும் வழங்கப்பட்டுள்ளன. ‘‘மேலும் உங்களைத் தாக்கும் ஒருவர், அவர் உங்களைத் தாக்கியதைப் போலவே அவரைத் தாக்கவும்’’ (அல்குர்ஆன்). தற்பாதுகாப்புரிமை இருப்பதை இவ்வசனம் நிரூபிப்பது மட்டுமல்ல தனியார் பாதுகாப்பு உரிமைக்கான எல்லைகளையும் அமைக்கிறது. எனவே தற்பாதுகாப்பு என்ற கருத்தைப் பொறுத்தவரை, இஸ்லாமிய குற்றவியல் சட்டமானது குற்றங்களைத் தடுப்பது மற்றும் சமூக ஒழுங்கை மேம்படுத்துதல் போன்ற கருத்தை விளக்குவதோடு தற்பாதுகாப்பு என்து ஒரு கடமையெனவும் அல்குர்ஆன் குறிப்பிடுகிறது (Owaydhah,2014).

மேலும் இஸ்லாத்தில் ஜிஹாத்துக்கான உண்மையான காரணம் எதிரியின் தாக்குதலைத் தவிர்க்கவும் அத்துமீறல், குடும்பம், உடைமைகள், தேசம் மற்றும் மதம் ஆகியவற்றின் பாதுகாப்புக் கருதியும் மனித சர்வாதிகாரத்தை விரட்டவும், விசுவாசிகள் தங்கள் வழிபாடு மற்றும் செயலில் உறுதியுடன் இருக்கும்படி வலுப்படுத்தவும் மேற்கொள்ளப்படுவதாக பெரும்பாலான இஜ்லாமிய அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். அத்தோடு போர் விதிகள் குறித்து குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் அடக்குமுறையாளர்களுக்கு எதிரான பாதுகாப்பு என்றும் விளக்கப்படுகிறது. நடைமுறை சூழலில், இந்த காரணங்கள் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் முற்றிலும் பிரதிபலித்தது. இமாம் ரஷீத் ரிழா அவர்கள் போருக்கான குறிக்கோள்களை பின்வருமாறு கூறுகிறார் ஜிஹாத் என்பது அநீதி, அத்துமீறல், சித்திரவதை, துன்புறுத்தல், பித்னா ஆகியவற்றைத் தடுக்கவும் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு மற்றும் நீதியை ஒருங்கிணைக்கவும் பிரயோகிக்கப்படுகிறது (Tazul.,2020).

இஸ்லாத்தில் தற்பாதுகாப்பு உரிமையானது மரணம், சொத்து அழிப்பு, கடத்தல், சட்ட விரோத தடுப்புக் காவல், உடல் காயங்கள் முதல் ஒரு நபரின் கண்ணியம், சுதந்திரம் என்பவற்றைப் பாதிக்கும் எந்தவொரு செயலுக்கு எதிராகவும் நீண்டுள்ளது. இந்த அர்த்தத்தில் எந்தவொரு அதிகாரமும் நியாயமும் இல்லாமல் ஒருவர் மற்றவர் மீது வரம்பு மீறும் போது தீமையைத் தடுக்க பாதுகாவலருக்கு உரிமை உண்டு (Al-shafi Al-umm vol. 6.p.27). யாராவது (வேண்டுமென்றே) உங்கள் வீட்டிற்குள் எட்டிப் பார்த்தால், நீங்கள் அவரை ஒரு கல்லால் குத்தி, அவரது கண்ணைக் காயப்படுத்தினால் உங்கள் மீது எந்த குற்றமும் இருக்காது (அல்புஹாரி).

எனவே இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படையில் பிறரால் அச்சுறுத்தல் ஏற்படும் போது அதனைத் தடுப்பதற்கும் தீங்கிலிருந்து எம்மைக் காப்பதற்கும் எமது தனித்துவத்தினை பாதுகாக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதே நேரம் மற்றவர்களுக்கு எதிராக தவறு செய்யப்படுவதைக் காணும் எவரும் பாதிக்கப்பட்டவருக்கு உதவவும் தவறுகளைத் தடுக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள். தாக்குதலைத் தவிர்ப்பதற்கும் பொருளை அடைய முடிந்தவரை சிறிய தீங்கு விளைவிப்பதற்கும் பாதுகாவலர் தனது அதிகாரத்தில் ஒவ்வொரு நியாயமான வழிகளையும் பயன்படுத்தாவிட்டால், மரணம் அல்லது உடல் ரீதியான தீங்கு விளைவிப்பதை ஷரீஆ அனுமதிக்காது. எனவே தற்காப்பு குறித்த இத்தகைய சட்டபூர்வமான புரிதல் இலங்கை குற்றவியல் சட்டத்தில் பிரதிபலிக்கிறது. மேலும் சில சூழ்நிலைகளின் இருப்பை நம்புவதற்கு, அத்தகைய நம்பிக்கைக்கு வழிவகுக்கும் சில காரணங்கள் இருக்க வேண்டும். தாக்குதல் நடத்தியவர் அவரைத் தாக்குவார் என்ற நியாயமற்ற நம்பிக்கை தனியார் பாதுகாப்புக்கு போதுமானதாக இருக்காது. இவ்வாறு தற்காப்புக்கான நியாயத்தை தனியார் பாதுகாப்புக்கு மறுபெயரிடுவதன் அவசியத்தை இஸ்லாமிய சட்டமும் இலங்கை குற்றவியல் சட்டமும் ஒப்புக் கொள்கின்றன.

### 3.2. உடல் தொடர்பான தற்பாதுகாப்புரிமை

இலங்கை குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொருவரும் 92ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள விதிகளுக்கமைய மனித உடலைப் பாதிக்கும் ஏதாவது தவறுக்கெதிராக தன்னையும் வேறு எவரையும் அல்லது அவரின் உடமையைக் காப்பதற்கும் தகுதியுடையவராவார். திருட்டு, கொள்ளை, சொத்தழிப்பு, அத்துமீறல் போன்ற ஏதேனும் செயலுக்கெதிராக அல்லது அத்தைகைய செயலைச் செய்ய எத்தனிக்கும் செயலுக்கெதிராக தன்னுடையதும் அல்லது வேறொருவரினதும் உடமையைக் காப்பதற்கு உரிமையுடையவராவார். (தண்டணைச் சட்டக் கோவை – பிரிவு 90). மரண பயத்தை ஏற்படுத்தும் தாக்குதல் அல்லது கடும் அச்சுறுத்தல், நியாயமான முறையில் கடுமையான காயத்தை உண்டுபண்ணும் அச்சுறுத்தல், கற்பழிப்புக்கு எத்தனித்தல், இயற்கைக்கு மாற்றமான காமத்தை வெளிப்படுத்தும் தாக்குதல், ஆட்கடத்தல், சில சூழ்நிலைகளில் ஒரு நபரை சட்டத்துக்கு முரணாக அடைத்து வைத்தல், (தண்டணை சட்ட பிரிவு 93) ஆகியன குற்றவாளிக்கு மரணத்தை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகளாக கருதப்படுகிறது. இவ்விதிகளுக்கு நேர்மாறாகவே இஸ்லாமிய சட்டவிதிகளும் அமைந்திருக்கின்றன. ஒரு மனிதன் தனது வாழ்க்கையை பாதுகாப்பது ஷரிஆவின் பார்வையில் கடமையாகக் கருதப்படுகிறது. இதனை நியாயமான வரம்புக்குள் காத்துக் கொள்வதென்பது அறிவுடமையாகும். இதனை நபியவர்கள் குறிப்பிடும் போது ஒருவர் தன் உயிரை எதிரியிடமிருந்து காத்துக் கொள்வதற்காக அவரைத்தாக்கி தான் கொல்லப்பட்டால் அவர் உயிர்த்தியாகி என்றார்கள் (இப்னு மாஜா) எனவே ஒருவர் கடுமையான மரண அச்சுறுத்தலுக்கு எதிராக எதிராளியிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்.

போர் தொடுக்கப்பட்டோருக்கு அவர்கள் அநியாயம் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதனால் (அவ்வாறு போர் தொடுத்த கா∴பிர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு) அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது (அல்குர்ஆன் 22:39). எவர் வேண்டுமென்று ஒரு உயிரைக் கொலை செய்கிறாரோ அவர் முழு மனித இனத்தையும் கொலை செய்தவர் போலாவார் (அல்குர்ஆன்). மேற்கண்ட அல்குர்ஆனிய வசனங்கள் மனித உயிர்களைப் பாதுகாக்க வேண்டுமென வலியுறுத்துவதோடு பாதுகாப்பு பொறிமுறையை பயன்படுத்துமாறும் அறிவுறுத்துகிறது. சாதாரண சூழ்நிலையில் எந்தவொரு உடலுக்கும் தீங்கு விளைவிப்பது கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது, ஆனால் பாதுகாப்பின் அவசியம் அதை அனுமதிப்பதை மேற்கண்ட வசனத்திலிருந்து புலப்படுத்துகிறது. மேலும் மனித ஆன்மாவை அநியாயமாக கொல்வதை நபி (ஸல்) கடுமையாக கண்டித்தாரகள். நபியவர்கள் தமது கடைசி பிரியாவிடை உரையின் போது பின்வருமாறு கூறினார்கள்: ''மனிதர்களே, என் வார்த்தையைக் கேளுங்கள், இந்த வருடத்திற்குப் பிறகு நான் உன்னை மீண்டும் சந்திப்பேனா என்று எனக்குத் தெரியாது. இந்நாளின் புனிதத்தைப் போல உங்கின் இரத்தம், உங்கள் சொத்து மற்றும் மரியாதை ஆகியன உங்கள் இறைவனைச் சந்திக்கும் வரை புனிதமானது என்பதாகும் (புஹாரி). எனவே இவற்றுக்கு மாற்றமாக ஒருவரின் செயற்பாடுகள் அமையுமிடத்து அடக்குமுறையாளருக்கு எதிராக தற்காப்பு அதிகாரத்தினைப் பயன்படுத்த முடியும். தற்பாதுகாப்புக்கான தேவை என்ற கோட்பாட்டின் கீழ் ஒரு நபர் பொது விதிகளை மீற அனுமதிக்கப்படுகையில், அவர்

குறைந்தபட்ச வரம்புகளுக்குள் இருக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். உயிர் அல்லது சொத்தை பாதுகாப்பது என்பது ஒரு சாதாரண உரிமை அல்லாமல் ஒரு கடமையென இஸ்லாமிய நீதிபதிகள் கருதுகிறார்கள். இஸ்லாமிய சட்டத்தில் பாதுகாப்பு பொறிமுறையானது ஒருவரை குற்றவாளியிடமிருந்து விடுவிப்பதோடு மனித வாழ்க்கை, மதம், சொத்து, புத்தி மற்றும் பரம்பரை போன்றவைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் அல்லது பாதுகாப்பில் போராட வேண்டும் என குறிப்பிடுகிறது. (Sulaiman, Olayiwola, 2016).

இலங்கை குற்றவியல் சட்டத்துடன் ஒப்பிடும்போது பல நூற்றாண்டுகளாக இஸ்லாமிய ஷரீஆ தனியார் பாதுகாப்புக்கான உரிமையை அங்கீகரித்திருப்பதை இங்கு காணலாம். அதே போல ஆட்கடத்தல் மற்றும் சட்டவிரோத தடுப்புக்காவல் அல்லது மனித உடலை பாதிக்கும் வேறு குற்றங்கள் சம்பந்தமான ஷரீஆவின் கொள்கைகள் இலங்கை குற்றவியல் சட்டங்களுடன் ஒத்துப்போகின்றன. இஸ்லாமிய சட்டமானது தற்பாதுகாப்பு உரிமையின் போது தனிநபர் நலனை கருத்திற் கொள்வது போல பிறரின் நலனையும் கருத்திற் கொள்கிறது. இதனை பின்வரும் ஹதீஸின் மூலம் அறியலாம். "உங்கள் சகோதரர் ஒரு கோபக்காரரா? அல்லது பாதிக்கப்பட்டவரா என ஒருவரிடம் கேட்கப்பட்டது," அதற்கவர், பாதிக்கப்பட்டவருக்கு உதவுவது புரிந்துகொள்ளத்தக்கது, ஆனால் தவறு செய்தவர்களுக்கு எவ்வாறு உதவுவது? எனக் கேட்க, மற்றவர்களுக்கு எதிராக தவறு செய்யப்படுவதைக் காணும் எவரும் பாதிக்கப்பட்டவருக்கு உதவும் தவறு செய்பவரின் தவறுகளைத் தடுக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள் என பதிலளித்தார் (புஹாரி). எனவே இலங்கை குற்றவியல் சட்டத்தில் தற்பாதுகாப்பு உரிமைக்கான நோக்கத்தினை விடவும் இஸ்லாமிய சட்டத்தின் பார்வையின் கீழ் தற்காப்பு உரிமையை பயன்படுத்துவதில் பல உன்னதமான நோக்கங்களும் அடங்கியுள்ளன.

### 3.3. கற்புக்கான தற்பாதுகாப்புரிமை

ஒவ்வொருவரும் தனது கற்பினையும் குடும்பத்தின் மானத்தையும் பாதுகாக்க வேண்டிய கடமையில் உள்ளார் என்பதில் முஸ்லிம் நீதிபதிகள் ஒருமித்த கருத்தில் உள்ளனர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விபச்சாரம், அல்லது பிற அநாகரீகமான பாலியல் செயல்களைச் செய்ய இஸ்லாத்தில் அனுமதியில்லை. ஒருவர் தனக்கு சொந்தமில்லாத ஒரு அந்நியப் பெண்ணை தொடுவதை விட தன்னை ஒரு இரும்பு ஊசியினால் காயப்படுத்துவது மேல் என நபியவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த வழக்கில் ஒரு பெண்ணின் கற்புக்கெதிராக தாக்குதல் நடத்தியவருக்கு மரணத்தை ஏற்படுத்தாமல் அவளுக்கு பாதுகாப்பு சாத்தியமில்லை என்றால் தற்பாதுகாப்பு கருதி அவருக்கு மரணத்தை ஏற்படுத்த அனுமதிக்கப்படுகிறது. அவர் (நிராகரிப்பவர்)களை எதிர்ப்பதற்காக உங்களால் இயன்ற அளவு பலத்தையும், திறமையான போர்க் குதிரைகளையும் ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள் இதனால் நீங்கள் அல்லாஹ்வின் எதிரியையும், உங்களுடைய எதிரியையும் அச்சமடையச் செய்யலாம் (அல்குர்ஆன்8:60). எனவே எதிரியை அச்சுறுத்துவதற்காகவும் தம்மைக் காத்துக் கொள்வதற்காகவும் தற்பாதுகாப்புரிமையை பயன்படுத்த இஸ்லாம் அனுமதிக்கிறது. ஷாபி இமாமின் கருத்துப்படி பாலியல் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்டவரைப் பொருத்தவரை அவளுடைய கற்புத்தன்மையைக் காத்துக்கொள்வது அவளுடைய கடமையாகும். பாதுகாப்புப்


ISBN 978-624-5736-14-0

போக்கில் அவள் தாக்குதாரரைக் கொன்றால் அவள் அதற்கு பொறுப்பல்ல. ஒரு பெண்ணின் விருப்பமின்றி அவள் கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்டால் எதிராளிக்கு கிஸாசுடைய தண்டனை உண்டு என்பது ஹன்பலி இமாமின் கருத்தாக உள்ளது (Azar,2014).

மேலும் ஒரு மனிதன் தன் மனைவி பாலியல் பலாத்காரம் செய்யப்படுவதைப் பார்க்கிறான், மனைவியைப் பாதுகாப்பதற்காக அவ்வாறு செய்யக்கூடிய மனிதனைக் கொல்வதை விட அவனுக்கு வேறு வழியில்லை எனும் போது அவர்கள் இருவருமே தங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்திலிருப்பதால் அவர்களின் செயலின் விளைவாக அவர்கள் மீது எந்தக் குற்றமும் இல்லை. (Sulaiman, Olayiwola, 2016). பாலியல் பலாத்காரமின்றி இரு தரப்பினரின் பரஸ்பர ஒப்புதலால் சட்டவிரோதமான முறையில் உடலுறவு மேற்கொள்ளப்பட்டிருந்தால் இலங்கை குற்றவியல் சட்டத்தில் தனியார் பாதுகாப்புக்கு உரிமை இல்லை. எனினும் பதினாறு வயதுக்கும் குறைவான ஒரு பெண்ணுடன் 18 வயதிற்கு மேற்பட்ட ஒருவர் பகிரங்கமாகவோ அல்லது தனிமையிலோ மேற்கொள்ளப்படும் உடலுறவானது குற்றவியல் தண்டணைச் சட்டத்தின் கீழ் கற்பழிப்பாகக் கருதப்படும். அவ்வாறு செய்பவர் குற்றவாளியாக கருதப்படுவதோடு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நீடிக்கப்படக்கூடிய காலப்பகுதிக்கு மரியல் தண்டணைக்கும் அல்லது குற்றப்பணத்திற்கும் அல்லது இரண்டுடனும் தண்டிக்கப்படல் வேண்டும். (இலங்கை தண்டணைச் சட்டக் கோவை பிரிவு 365 A). ஆனால் தற்பாதுகாப்புரிமை பொறுத்தவரை சட்டவிரோதமான உடலுறவுக்கு இரு கட்சிகளின் ஒப்புதலுக்கு ஷரீஆவில் எந்த முக்கியத்துவமும் வழங்கப்படுவதில்லை. ஏனெனில் இஸ்லாத்தின் பார்வையில் திருமணத்திற்கு புறம்பாக மேற்கொள்ளும் எந்தவொரு ஆண் பெண் உறவும் தடுக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பாதுகாவலர் இரு தரப்பினருக்கும் மரணத்தையும் ஏற்படுத்தினால் அவர் குற்றப் பொறுப்பேற்க மாட்டார் என்பதோடு திருமணமாகாதவர் சட்டவிரோதமான உடலுறவு கொண்டால் 100 கசையடிகளும் திருமணமானவர்களினால் இது மேற்கொள்ளப்பட்டிருந்தால் கல்லெறிந்து கொள்ள வேண்டுமென்றும் ஷரீஆ பணிக்கிறது. ஆனால் ஷரீஆ சட்டத்தின்படி குற்றத்தை 4 பேர் நேரில் கண்டாலன்றி இந்த நடவடிக்கை நியாயப்படுத்தப்படாது. இலங்கை போன்ற முஸ்லிம் சிறுபான்மை நாட்டில் இத்தகைய இஸ்லாமிய குற்றவியல் சட்டங்களை அமுல்படுத்த அனுமதியில்லை. தாக்குதலின் உடனடித்தன்மை மற்றும் ஆக்கிரமிக்க எத்தனித்தல் ஆகியன தற்காப்பில் சட்டபூர்வமான கொலைக்கு முன் நிபந்தனையாகும். இஸ்லாமிய ஷரீஆவின் விதிகள் மாத்திரமன்றி இலங்கை குற்றவியல் தண்டனைச் சட்டத்தின் விதிகளும் இத்தகைய நடைமுறைப் பயன்பாட்டை ஒப்புக் கொள்கின்றன. தான் தப்பிப்பதற்கான மாற்று வழிகள் இல்லாத சூழ்நிலைகளினால் ஒருவர் கட்டாயப்படுத்தப்படும் போது தற்பாதுகாப்புக்காக செயல்பட வேண்டிய கடமை எழுகிறது. எனினும் கூச்சலிடுதல், பிறரை உதவிக்கு அழைப்பதன் மூலமோ தாக்குதலை தடுக்க முடியும் என்றால் எதிரிக்கு மரணத்தை ஏற்படுத்தாமல் இருப்பது நீதியானது. எனவே குறித்த செயல் தொடர்பான சூழ்நிலைகளையும் சான்றுகளையும் பாதுகாவலரின் ஆளுமையும் சட்டவிரோத தாக்குதலின் நேரம் மற்றும் இடமும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதை இலங்கை நீதிமன்றங்களும் இஸ்லாமிய நீதிமன்றங்களும் பொருள்கோடல் செய்துள்ளன.

### 3.4. சொத்துக்களுக்கான தற்பாதுகாப்புரிமை

ஒவ்வொரு மனிதனும் தனது சொத்துக்களை தனது சொந்த வழியில் பாதுகாக்க கடமைப்பட்டிருக்கிறான். இலங்கை குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் நியாயமான அளவில் மரண பயத்தையும் கடுமையான தீங்கினையும் ஏற்படுத்தும் எனக் கருதக்கூடிய கொள்ளை, இரவில் வீட்டை உடைத்தல், சொத்துக்களுக்கு தீ வைத்தல், கட்டிடம், வீடு, கூடாரம் அல்லது கப்பலிலுள்ள சரக்குகளை அழித்தல், வன்குறும்பு, வீட்டினுள் அத்துமீறல் போன்ற சந்தர்ப்பங்களில் சொத்துக்களை பாதுகாப்பதற்கான உரிமை பிரிவு 92 நீட்டிக்கப்பட்டுள்ளது (குற்றவியல் சட்டம் பிரிவு 96). எனவே சொத்தின் தனிப்பட்ட பாதுகாப்பிற்கான உரிமையானது நியாயமான பயம் இருக்கும் போதும் அத்தகைய செயல் குற்றவாளியினால் தொடரும் போதும் அல்லது பின்வாங்கப்படும் வரையிலும் பொது அதிகாரியின் உதவி கிடைக்கப்பெறும் வரையிலும் நீழுவதை சட்டத்தின் பிரிவு 98 குறிப்பிடுகிறது. இவ்விதிகளுக்கு ஏற்புடையதாகவே இஸ்லாமிய ஷரீஆவிலும் தனிநபர்களின் உடமைகளை பாதுகாப்பதும் இன்னும் சட்டவிரோதமான வழிகளில் வேறு எந்தவொரு சொத்தையும் எடுத்துக்கொள்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது. ‘‘விசுவாசிகளே! பரஸ்பர ஒப்புதலால் ஒரு வர்த்தகமாக இருப்பதைத் தவிர, உங்கள் சொத்துக்களை நீங்கள் அநியாயமாக உண்ணாதீர்கள்.” என அல்குர்ஆன் கட்டளையிடுகிறது. அதே போல உங்கள் நொத்துக்களுக்காக போராடுங்கள் என நபியவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இஸ்லாமிய நெறிகளின் கீழ் ஒருவரின் அனுமதியின்றி மற்றவர்களின் வீட்டிற்குள் நுழைய யாருக்கும் உரிமை இல்லை. புனித அல்குர்ஆன் இதனை விசுவாசிகளுக்கு பின்வருமாறு அறிவுறுத்துகிறது, ”ஈமான் கொண்டவர்களே! உங்கள் வீடுகளல்லாத (வேறு) வீடுகளில், அ(வ்வீட்டிலுள்ள)வர்களிடம் அனுமதி பெற்று, அவர்களுக்கு ஸலாம் சொல்லாதவரை (அவற்றினுள்) பிரவேசிக்காதீர்கள் (அல்குர்ஆன் 24:27).

இவ்வாறு பாதுகாப்பு தொடர்பான அனைத்து நிகழ்வுகளிலும் ஒருவரின் உரிமை சுயத்துக்கு மாத்திரமே கட்டுப்படுத்தப்படவில்லை. மாறாக மற்றவர்களையும் பாதுகாக்குமாறு இஸ்லாம் பணிக்கிறது. விசுவாசிகளின் பண்புகளை அல்குர்ஆன் குறிப்பிடும் போது எதிரிகளை எதிர்த்துப் போராடுவதில் விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பவர்கள் என்று குறிப்பிடுகிறது. தவறு செய்பவருக்கு எதிராக உடல் பலவீனம் உடையவர்களுக்கு உதவுதல் அவசியம் என்பது இவ்வசனம் மூலம் புலப்படுகிறது. இவ்விதிகள் சமூகத்தின் பலவீனமான நபர்களுக்கு பிரயோசனமுடையதாக இருக்கும் (Ahmad Bin Hanbal, Ahmad Bin Hanbal Vol.5 P.154).

பாதிக்கப்பட்டவர் சொத்துக்களைப் பாதுகாப்பதில் நியாயமான சக்தியைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளதோடு தாக்குதல் நடத்துபவருக்கு மரணத்தை ஏற்படுத்தாமல் தனக்கு பாதுகாப்பு சாத்தியமில்லை என்று நம்பினால், அவர் மரணத்தை ஏற்படுத்த உரிமை உண்டு (Tawwab,Sayed,1983).இங்கு தாக்குபவர் பாதுகாவலரின் உடலுக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறார். இப்போது பாதுகாவலர் தனது உடலைக் காக்கிறார். சொத்தை அல்ல. இதன் கருத்து உயிர் மற்றும் உடமை ஆகிய இரண்டையும் பாதுகாப்பதை இணைக்கிறது. எனவே கொடிய தாக்குதலுக்கு உள்ளானவர் தன்னையும் தனது சொத்துக்களையும்

பாதுகாப்பது கடமையாக கருதப்படுவதுடன் தாக்குதல் தாரரின் ஆக்கிரமிப்புக்கு எதிராக தன்னை தற்காத்துக் கொள்ளாவிட்டால் அவர் விரும்பியே தன்னை அழித்துக் கொண்டவர் போலாகிறார். இதனையே அல்குர்ஆன் குறிப்பிடும் போது உமது கரங்களாலேயே அழிவினை ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள் (2:195) என்கிறது. அத்தோடு தற்பாதுகாப்புரிமையை பயன்படுத்தும் வாய்ப்புகள் இருந்தும் அதை நிறைவேற்றத் தவறியவர் இஸ்லாத்தின் பார்வையில் குற்றவாளியாகவும் கருதப்படுகிறார் (Azar,2014). எனவே சொத்துரிமை மீறல் சட்டவிரோதமானது என்றும் சொத்துக்கள் தொடர்பான ஆக்கிரமிப்புக்கு எதிராக தற்பாதுகாப்பு உரிமையை பயன்படுத்த முடியும் என்பதோடு தன் உயிருக்கு கடுமையான அச்சுறுத்தல் ஏற்படும் போது எதிரிக்கு மரணத்தை ஏற்படுத்தலாம் என்பதையும் இவ்விரு சட்டங்களும் வெளிப்படையாக அறிவிக்கின்றன.

### 3.5. தற்பாதுகாப்புரிமையை பயன்படுத்துவதற்கான அளவு

உடலுக்கு தீங்கு ஏற்படுத்தும் நியாயமான பயம் அல்லது முயற்சியானது தொடர்ந்து இருக்கும் போது தற்காப்பு உரிமை தொடங்கப்படுகிறது (தண்டணை சட்ட பிரிவு 95) தற்காப்புரிமையை பிரயோகிக்கும் போது அதனை ஒரு அப்பாவிக்கு எதிராக பயன்படுத்த முடியாது என்பதோடு (தண்டணை சட்ட பிரிவு 99) பாதுகாப்பு நோக்கத்துக்கு அவசியமான தீங்கிலும் கூடுதலான தீங்கினை ஏற்படுத்த தற்காப்புரிமையை பிரயோகிக்க முடியாது என்றும் தண்டணைச் சட்டக் கோவை பிரிவு 92-4 குறிப்பிடுகிறது. இஸ்லாமிய நோக்கில் பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப்படும் சக்தி அவசியமாகவும் நியாயமானதாகவும் பாதுகாப்பிற்காக பிரயோகிக்கம் நடைமுறை ஆக்கரமிப்புடன் தொடர்புடையதாகவும் தற்பாதுகாப்பினை பயன்படுத்துபவரின் நோக்கம் தீங்குக்கு விகிதாசாரமாகவும் இருக்க வேண்டும் என்றும் அல்குர்ஆனின் பின்வரும் வசனம் குறிப்பிடுகிறது. ஆகவே, எவனாவது (அம்மாதத்தில்) உங்களுக்கு எதிராக வரம்பு கடந்து நடந்தால், உங்கள் மேல் அவன் எவ்வளவு வரம்பு மீறியுள்ளானோ அதே அளவு நீங்கள் அவன் மேல் வரம்பு மீறுங்கள் (அல்குர்ஆன் 2:194).

எனவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாதுகாவலருக்கு அவசியத்தின் எல்லைக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. நல்ல செயல்களில் ஒத்துழைக்கவும் வன்குறும்புகளை எதிர்த்துப் போராடவும் தீமையை அடக்கவும் முஸ்லிம்களுக்கு கட்டளையிடும் பல வசனங்கள் அல்குர்ஆனில் உள்ளன (Raza, Rashid. Tafseer Al-Minar vol.2 p.213). உங்களை எதிர்த்துப் போர் புரிபவர்களுடன் நீங்களும், அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள் ஆனால் வரம்பு மீறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை (அல்குர்ஆன் 2:190). ஷரீஆ அனைத்து வகையான மற்றும் வெளிப்பாடுகளிலும் தனியார் பாதுகாப்புக்கான உரிமையை அங்கீகரிக்கிறது. இருப்பினும், இவ்வுரிமையைப் பயன்படுத்துவது சில நிபந்தனைகளுக்கு உட்பட்டது. சட்டவிரோத தாக்குதல், தாக்குதல் உடனடி இருக்க வேண்டும், வேறு எந்த வகையிலும் தனியார் பாதுகாப்பு சாத்தியமற்றது எனக்கருதும் சாத்தியமான சூழ்நிலை, நியாயமான சக்தியைப் பயன்படுத்துதல் என்பனவாகும். அத்தோடு சட்டவிரோத தாக்குதலுக்கும் தற்பாதுகாப்பு உரிமை ஆகியவற்றுக்கு இடையே நேரடியாக விகிதாசார உறவு இருக்க வேண்டும். ஒருவர்

ஆபத்தை அஞ்சுவதற்கு முன் தற்பாதுகாப்பு தொடர்பில் எந்த உரிமையும் இல்லை என்பதோடு அது நிறுத்தப்பட்ட பின்னர் அத்தகைய உரிமையை பிரயோகிக்கவும் முடியாது (Azar,2014). ஒருவர் உடனடி ஆபத்தை உணர்ந்தாலொழிய தற்பாதுகாப்பிற்கான உரிமையை பயன்படுத்த உரிமை பெற மாட்டார் என்பதோடு எதிர்காலத்தில் தீங்கு விளைவிக்கும் ஒரு குற்றவாளியின் நோக்கம் தனியார் பாதுகாப்புக்கான உரிமையை தற்சமயம் ஏற்படுத்தாது என்பதிலும் இவ்விரு சட்டங்களும் ஒன்றுபடுகின்றன.

மரண பயம் அல்லது கடுமையான காயத்தை ஏற்படுத்தாத பொது ஊழியரின் செயலுக்கு எதிராக தற்பாதுகாப்பு உரிமையினை பயன்படுத்த முடியாது. (தண்டணை சட்ட பிரிவு 92-1,2) நாட்டின் பாதுகாப்பிற்காக பணிக்கப்பட்ட பொது அதிகாரிகளின் சட்டரீதியான செயல்களுக்கு எதிராக ஒருவர் செயற்பட முடியாது. அவர்களுக்கு கட்டுப்படுவது ஒவ்வொரு குடிமகனினதும் கடமையாகும். இதனையே இஸ்லாமும் வலியுறுத்துகிறது. இதனை பின்வரும் வசனங்கள் முலம் விளங்கலாம். ‘‘நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்குக் கீழ்படியுங்கள், இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்’’ (அல்குர்ஆன் 4:59), பாவத்தைக்கொண்டு ஏவப்படாதவரைத் தமது விருப்பிலும் வெறுப்பிலும் தலைமைக்கு செவிமடுத்துக் கீழ்படிய வேண்டும். பாவத்தைக்கொண்டு ஏவப்பட்டால் செவிமடுக்கவோ, கீழ்படியவோ கூடாது’’ (நபிமொழி) தலைவர்கள் எனும் வகையில் நல்ல அதிகாரிகளுக்கும் கட்டுப்படுவது சிறந்த முஸ்லிமின் பண்பாகும். இருப்பினும் தீங்கினை நோக்காகக் கொண்டு அவர்கள் செயற்பட்டால் அதற்கு எதிர்ப்புக்காட்ட வேண்டும். ஷாபி இமாமின் கருத்துப்படி ஒரு ஆக்கிரமிப்பாளர் பொது ஊழியராக இருந்தால் சொத்துக்களைப் பாதுகாப்பது தற்பாதுகாப்பு உரிமையின் உச்சத்தை எட்டாது. இருப்பினும் ஒரு சாமானியரால் தாக்கப்பட்டால் சொத்துக்களைப் பாதுகாப்பது கடமையாகும். இது பாதுகாவலரை தேவையற்ற நிதி இழப்பு, சோர்வு, உடல் தீங்கு ஆகியவற்றிலிருந்து காக்கும் (Al Qalubi,1956).

### 3.6. பைத்தியக்காரத்தனம் மற்றும் சிறுமை

ஒருவரின் புத்திசுவாதீனமின்மை மற்றும் சிறுபிள்ளைத்தனம் போன்ற காரணங்களினால் மேற்கொள்ளப்படும் குற்றங்கள் குற்றமாக கருதப்படாவிட்டாலும் கூட அத்தகையவர்களினால் மேற்கொள்ளப்படும் குற்றங்களுக்கு எதிராக தற்பாதுகாப்பு உரிமையினை பிரயோகிக்க முடியும் என தண்டணை சட்டத்தின் பிரிவு 91 குறிப்பிடுகிறது. இஸ்லாமிய நோக்கில் அவதானிக்கும் ஒரு நபரின் வாழ்க்கை, சொத்து அல்லது கற்புக்கு ஆபத்தை விளைவிக்கும் எந்தவொரு சட்டவிரோத தாக்குதலுக்கும் எதிராக தனியார் பாதுகாப்பு உரிமை உள்ளதால் இத்தகையவர்களுக்கு எதிரான தற்பாதுகாப்புரிமை பயன்படுத்துவது தொடர்பில் இஸ்லாமிய சட்டத்துறை அறிஞர்களுக்கு மத்தியில் சில கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அபு யூசூப்பைத் தவிர ஹனபி மத்ஹபினரின் கூற்றுப்படி எதிரிக்கெதிராக தாக்குதல் நடத்துபவர் குற்றவியல் ரீதியாக பொறுப்பேற்க வேண்டும் என்பதும் குறித்த சட்டம் சட்டத்தால் தண்டிக்கப்படக்கூடிய குற்றமாக இருக்க வேண்டும் என்பதும் தனியார் பாதுகாப்பு உரிமையைப் பயன்படுத்துவதற்கான தேவையொன்று ஏற்பட்டதாக இருக்க வேண்டுமென்றும் குறிப்பிடப்படுகிறது. மற்றுமொரு வகையில் கூறுவதாயின் ஒரு மிருகத்திடமிருந்து ஒருவர்


ISBN 978-624-5736-14-0

தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அதனைக் கொன்றால் விலங்கின் மதிப்பை அதன் சொந்தக்காரருக்கு வழங்குதல் வேண்டும் (Oudhah, Qadir, 1997). அதே போலவே தனிப்பட்ட பாதுகாப்பு உரிமையைப் பயன்படுத்துவதில் ஒரு சிறியவரை அல்லது பைத்தியக்காரனைக் கொன்றால் அவர் கிசாஸுக்குப் பொறுப்பேற்க மாட்டார் என்பதோடு தியத்தை செலுத்துவதனூடாக அவரது பொறுப்பு குறைக்கப்படுகிறதென்றும் அவர் குற்றவியல் ரீதியாக பொறுப்பேற்க வேண்டியது அவசியமில்லை என்ற பெரும்பான்மையினரின் கருத்தை அபுயூசூப் ஏற்றுக்கொண்டார் (Azar,2004). எனவே தனியார் பாதுகாப்பு உரிமையை பயன்படுத்துவதற்கு சட்டபூர்வ தகுதி வாய்ந்த நபரின் தாக்குதலுக்கும் சிறுமை அல்லது பைத்தியக்காரத்தனத்திற்கும் இடையே எந்த வித்தியாசமும் இல்லை (Al-Khatib, Al-Sharbini. Vol 4. P.194). என்பதை இஸ்லாமிய சட்டவிதிகளும் இலங்கை குற்றவியல் சட்ட விதிகளும் ஏற்றுக்கொள்கின்றன. இங்கு சட்டவிரோத தாக்குதலின் மூலத்தை விட அது ஏற்படுத்தும் ஆபத்தே கணக்கில் எடுக்கப்படுகிறது.

**முடிவுரை**

ஒருவரின் உடலுக்கும் உடமைகளுக்கும் எதிரான துன்பம் நிகழும் போது அவர்களுக்கு எதிராக போராடுவது இறைவனால் அனுமதிக்கப்படுகிறது. எனவே அத்துமீறலின் போது தன்னை தற்காத்துக் கொள்வதற்காக தற்பாதுகாப்பு உரிமையை பயன்படுத்துவது இஸ்லாத்தில் தெளிவாக அனுமதிக்கப்படுகிறதே தவிர இது வன்முறைக்கான கருவியல்ல. பிறருக்கு தீங்கு விளைவிக்கும் எண்ணத்துடன் தற்பாதுகாப்பினை முறைகேடாக பயன்படுத்துவதை இஸ்லாம் ஒரு போதும் அனுமதிப்பதில்லை. இலங்கை குற்றவியல் சட்டத்தில் குறியிடப்பட்டுள்ள தற்பாதுகாப்பு தொடர்பான பெரும்பாலான சட்டவிதிகள் இஸ்லாமிய சட்டவிதிகளுடன் பொருந்தக்கூடியதாகவுள்ளன. தற்பாதுகாப்பினை உருவாக்கும் செயலின் தகுத்திக்கு மேலதிகமாக அதனை நடைமுறைப்படுத்த முடியாது. அதே நேரம் ஒரு தவறான நடத்தை சரி செய்யப்படும் போதும் அல்லது அத்தகைய செயலின் நோக்கம் நிறுத்தப்படும் போதும் தற்காப்பு நோக்கம் நிறுத்தப்பட வேண்டும். பாதுகாவலர் தரப்பில் எதிராளியின் தாக்குதலை சான்றுகள் நிருபிக்க முடியாவிட்டால் அவர் குற்றவியல் பொறுப்புக்கு உரித்துடையவராகிறார். ஒருவரின் செயலுக்கு பதிலடி கொடுப்பதும் தற்பாதுகாப்பாக கருத முடியாது என்பதிலும் இருசட்டங்களுக்கிடையில் ஒத்ததன்மை காணப்படுகிறது. எனினும் தெய்வீக ஆணை வழியே தற்காப்பு விதிகளை பேணுவதில் இவ்விரு சட்டங்களும் வேறுபடுகின்றன. எனவே தற்காப்பு என்பது நீதியை அடிப்படையாகக் கொண்டுள்ளது மட்டுமன்றி அநீதியைக் குறைப்பதற்கான அவசியத்தால் செயற்படுத்தப்படுவதை இலங்கை தண்டனைச் சட்டங்களை விடவும் இஸ்லாமிய சட்டங்கள் உணர்த்தி நிற்கின்றன. இஸ்லாம் மற்றும் இஸ்லாமிய நீதித்துறையின் பிற அம்சங்கள் மனித உரிமை மீறல், வன்முறை, வன்முறை எண்ணங்கள் அதற்கான வழிகளையும் கடுமையாகத் தடை செய்கின்றது.

## REFERENCE


Abdul Tawwab, M.,Sayed, (1983). *Al-Difah al-Shar'hifi Fiqh al-Islami*. Alam al-Ktub: Cairo

Abdul Tawwab, Mohamed Sayed. (1983).Al-Difah Al-Sharhi fi Fiqh Al-Islami. Alam Al-Kutub.Cairo.

Ahamed Jannati, Defence and jihad in the quran. Retrieved from. https://al islam.org

Ahamed, (1977).*Islam Its Meaning and Message.*Ambika publication: New Delhi

Ahmad Bin Hanbal, Masnad Imam Ahmad Bin Hanbal (caqri yayinlari, turkey.1981) Vol.5 P.154

Al Khatib, Al Sharbini. (Maktaba Mustafa Al-Babi Al-Halbi, Egypt 1958) Vol. 4 P.194

Al Qalubi, (1956).Hasyat Al Qalubi Ala Sharah Minhai Al-Tableen. (3rd ed.) Maktaba Alhalbi: Egypt.

Anura shantha, Alias Priyantha. Purpose of Self Defence. Retrieved from https://www.lawnet.gov.lk

Azar Javed, (2004). Indoxication & Self Defence: A comparative study of principle of English law & shariah . International Islamic university of Islamabad: Pakistan

Definition of crime. Britanica. (2021). Retrieved from https://www.britanica.com/topic/criminal-law

Khalid, A., owaydhah, Mohamed yunnis.(2016). The Concept of Self Defene in Islamic Jurisprudence. *International Journal of Arts & Science*. 9 (4),209

Nyazee, Imran Ahsan Khan, (1998). *General Principles of Criminal Law*.Advanced Legal Studies Institute Islamabad

Oudah, Adul Qadir. (1997) *Al-tashrih Al-Jinai Al-islami.* Research publishing house: Beirut

Owaydhah,K.(2014). Justifications and Concept of Criminal Liablity in Shariah. *Humanities and social science review*. 3(2), 55-71

Raza, Mohamed Rashid, Tafseer Al-Minar (4th ed. Dar Al-Minar, Egypt, 1954) Vol.2 P.213.

Sri Lankan criminal defence pratice manual. Bar Association Andorsement. Retrieved from https://www.ibj.org

Sri Lankan penal Code No 02 of 1883

Sulaiman, Olayiwola, (2016). Defence mechanism in Criminal Liability Under Islamic Law. *International journal of innovative legal & political studies* 4 (4):19-29.octo-dec 2016

Tazul, Islam., (2020). Maqasid Al-Quran Approach towards understanding jihadism and De-Radicalization. *Mualim al quran wal Sunnah* 16,16-30

Yeo, (2017). Penal Code Defences: lessons from Sri Lanka. *JSTOR.* Retrieved from *https://www.jstor.org/stable2645*



ISBN 978-624-5736-14-0